
ஆப்பிரிக்க நாடுகள் வரிசை 4

# தென் ஆப்பிரிக்கா



'சோமலெ'

113649

ஆப்பிரிக்க நாடுகள் வரிசை—4

# தென் ஆப்பிரிக்கா

'சோமலெ'

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை-1.

முதற்பதிப்பு—நவம்பர் 1968

விலை 60 காசு

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

# தென் ஆப்பிரிக்கா

ஆப்பிரிக்கா என்பது ஒரு பெரிய நிலப் பரப்பு. இதன் தென் பகுதி முழுவதையும் நாம் குறிப்பதாக, தவருக எண்ணக்கூடாது, இப்பரந்துபட்ட நிலப்பரப்பின் தென் கோடியிலுள்ள ஒரு சிறு நாடு, உலகியலில் தென் ஆப்பிரிக்கா என்ற பெயரைத் தன் செல்வத்தாலும் அரசியல் வரலாற்ருலும், இயற்கையமைப்பாலும் பெற்றுவிட்டது.

ஐம்பது நாடுகள் கொண்ட ஆப்பிரிக்காவில் தென் ஆப்பிரிக்காவின் பரப்பு இருபதில் ஒரு பங்கு. மக்கள் தொகை பதினைந்தில் ஒரு பங்கு. இதிலிருந்து இந் நாடு ஆப்பிரிக்காவின் ஏனைய நாடுகளைவிட முக்கிய மானது என்பது தெளிவு.

வெள்ளையர் தொகையைக் கணக்கிட்டால் பிற ஆப்பிரிக்க நாடுகளில் வாழும் வெள்ளையரின் மொத்த எண்ணிக்கையைவிடக் கூடுதலானவர்கள் தென் ஆப் பிரிக்காவில் வாழ்கின்றனர்.

ஏற்றுமதியில் ஆப்பிரிக்காவில் ஐந்தில் ஒரு பகுதி தென் ஆப்பிரிக்கப் பொருள்களே. இறக்குமதி செய் யப்படும் பொருள்களிலும், தென் ஆப்பிரிக்காவின் தேவை இதே ஈவு ஆகும்.

மோட்டார்க்கார்கள், தொலைபேசிக் கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதிலும் பெரும் முன்னேற்றம் அடைந்திருக்கிறது, ஏனைய ஆப்பிரிக்க நாடுகளெல்லாம் ஒன்றுபட்டாலும்கூட இவர்களை எட்டிப்பிடிக்க இயலாது. மின்சார உற்பத்தியிலும் அந்த நாடுகளின் கூட்டணி, தென் ஆப்பிரிக்காவிடம் தோல்வியடைந்துவிடும்.

தங்கம் தோண்டி எடுப்பதில், தென் ஆப்பிரிக்காவின் உற்பத்தி அளவு, உலக உற்பத்தியில் நூற்றுக்கு எழுபது பங்கு. யுரேனிய உற்பத்தியில் கனடாவுக்கு அடுத்த இடம் தென் ஆப்பிரிக்காவுக்குத்தான் உரியது.

**வெள்ளையர்**

தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர் கறுப்பர் என்ற இரு பெரும் பிரிவினர் உள்ளனர்.

வெள்ளையர் என்ற பிரிவில் 1. ஐரோப்பியர், 2. ஆப்பிரிக்கன்ஸ் என்ற ஐரோப்பியர் வழிவந்த இனத்தார், 3. ஜப்பானியர் ஆகியோர் அடங்குவர்.

17 ஆம் நூற்றாண்டில் வாஸ்கோடகாமா நன்னம்பிக்கை முனையைக் கண்டார், பிறகு டச்சுக்காரர் தென் ஆப்பிரிக்காவில் குடியேறினர். அதன்பின் இந்நாட்டின் ஆட்சி ஆங்கிலேயர் வசமாயிற்று. பல காரணங்களால் இன்று தென் ஆப்பிரிக்காவை ஆளுபவர் வெள்ளையரே. வெள்ளையர் அங்கே இரு பிரிவினர். "ஆப்பிரிக்கன்" என்ற ஒருவகை மொழி பேசும் டச்சு மக்களின் பரம்பரையினர் ஒரு பிரிவினர், ஆங்கில மொழி பேசும் பிரிட்டானிய மக்கள் வழிவந்த மற்றொரு பிரிவினர்.

இரு வேறு பிரிவினர்களான இந்த வெள்ளையர் கூட்டத்தினிடையே பெரும் பிளவு இருந்து வருகிறது.

மனப்பான்மையிலும் இவர்கள் நிலை வெவ்வேறு. ஒருவரை மற்றவர் வெறுப்பதிலும் வேரறுப்பதிலும் முனைந்திருக்கின்றனர்.

இருப்பினும், பெருவாரியான கறுப்பர்களுக்கு வாக்குரிமை இல்லாமல் செய்வதில் வெள்ளையர் கூட்டம் இணைந்து செயல்படுகிறது. சிறுபான்மையராகிய வெள்ளையரைப் பெருந்தொகையாக உள்ள கறுப்பர் நாளடைவில் நசுக்கிவிடுவர் என்ற கவலையும் கலக்கமும் வெள்ளையர்க்கு இருந்து வருகின்றன. அதற்கேற்ப அரசினர் தங்கள் திட்டங்களைத் தீட்டி வருகின்றனர்.

டர்பன் மாநகரில் மேவில் என்பது ஒரு பகுதி. அங்கு நூற்றுண்டுக் காலமாக வாழ்ந்து வந்த பல இந்தியக் குடும்பங்கள் அவ்விடத்தைவிட்டு வெளியேறி 10 கி.மீ. அப்பாலுள்ள ஓரிடத்தில் குடியேற அரசினர் ஆணையிட்டுள்ளனர்.

**கறுப்பர்**

கறுப்பர் என்ற பிரிவில் 1. ஐரோப்பியர்க்கும் ஆப்பிரிக்க இனத்தனவருக்கும் ஏற்பட்ட இரத்தக் கலப்பில் பிறந்தவர்கள், 2. இந்தியர், பாக்கிஸ்தானியர், 3. ஜுலு, நீக்ரோ போன்ற இனத்தவர் ஆகியோர் அடங்குவர்.

**நிற வேறுபாடும்**

இங்கு வாழும் மேற்கண்ட பிரிவினருக்கும் இனத்தார்க்கும் எத்தனையோ வேறுபாடுகள் இருந்தாலும் இன்னும் இரண்டு மூன்று தலைமுறைகளுக்குப் பின்னர் தங்களுடைய சிக்கல்களைத் தாங்களாகவே தீர்த்துக்

கொள்வார்கள் என்று தென் ஆப்பிரிக்க அரசு கருது கிறது. இவ்வாறு சிக்கல்கள் தீரும்போது வெள்ளையர் நினைத்தவாறு முடிவுகளை எடுப்பதற்கு வசதியாக, அண்டை நாடுகளில் வெள்ளையர் கை ஓங்க ஆவன செய்கிறார்கள். தென் ஆப்பிரிக்காவிலும் அதைச் சுற்றிய நாடுகளிலும் வெள்ளையரின் குடியேற்றம் மிகவும் பெருக்கப்படுகிறது. வெள்ளையர்க்கெனத் தென் ஆப்பிரிக்காவின் பரப்பில் 87% ஒதுக்கப்பட்டிருக் கிறது. அவர்களைப்போல நான்கு மடங்கினரான கறுப்பர்களுக்கு நாட்டின் பரப்பளவில் 13% இடமே கொடுக்கப்பட்டிருக்கிறது.

கறுப்பர் தனித்து வாழவும், தங்கள் கல்வி முறை, பழக்கங்கள், சமயக் கொள்கைகள் ஆகியவற்றை வளர்த்துக்கொள்ளவும் வாய்ப்பு இருப்பதைப்பற்றியும் தென் ஆப்பிரிக்க அரசின் தலைவர்கள் பெருமையாகக் கூறிக்கொள்கின்றனர்.

தாங்கள் வாழும் பகுதிகளில் ஒரு சில குறிப்பிட்ட துறைகளில் உள்ளாட்சி உரிமை கறுப்பர்களுக்கே வ்ழங்கப்படும் என்றும் அரசினர் கூறுகின்றனர். தமிழர் அல்லாதவர்கள் தங்கள் உரிமைகளைச் சென்னை நகரில் தாங்கள் வாழும் சிறு சிறு பேட்டைகளில் மட்டும் தெரிவித்துக் கொள்ளலாம்; ஆனால் மாநக ராட்சியில் உறுப்பினர் ஆகக்கூடாது என்று சட்டம் வகுத்தால் எப்படி இருக்கும்?

இந்தத் திட்டங்களுக்கு ஆதரவு தேட, அரசினர் வீசிய வலையில் இந்தியத் தலைவர்கள் என்ற மீன்களும் பிடிபட்டிருக்கின்றன. இந்தியாவுக்குத் திரும்புவதை ஊக்குவிப்பதற்காக அவ்வாறு செல்பவர்களுக்கு அரசி னர் பணம் கொடுக்கின்றனர். இந்த உதவியை ஏற்று,

1964, 1965, 1966 ஆகிய மூன்று ஆண்டுகளில் இருபது பேர்தான் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்திருக்கின்றனர்.

தென் ஆப்பிரிக்கா என்னும்போது கறுப்பர் முகத்தில் மகிழ்ச்சியோ மலர்ச்சியோ தோன்றவில்லை. அவர்கள், ஆப்பிரிக்கா என்ற பொதுப் பெயரையே பயன்படுத்துகின்றனர். சூயஸ்க் கால்வாய் முதல் நன்னம்பிக்கை முனைவரை உள்ள ஐம்பது ஆப்பிரிக்க நாடுகளும் இணைந்து ஒரே ஆட்சியாக ஒன்றுபட்டால் தான், நிறப் போராட்டத்தில் வெற்றி காணலாம். அதுவரை ஜுலு, நீக்ரோ முதலிய எந்தக் கறுப்பரும் எவ்வளவுதான் படித்திருந்தாலும் தங்களுடைய திறமை முழுவதையும் காட்ட இயலாது. கறுப்பர் ஒருவர் எவ்வளவு பெரிய மருத்துவராயிருந்தாலும் ஒரு வெள்ளைக்காரர்க்கு அறுவைச் சிகிச்சை செய்ய இயலாது. எவ்வளவு பெரிய வழக்கறிஞராயிருந்தாலும் ஒரு கறுப்பர் ஒரு வெள்ளைக்காரருக்காக வழக்காட இயலாது.

### வெள்ளையர் வாழும் பகுதி

வெள்ளையர்க்காகக் குறிப்பிட்டிருக்கும் பகுதிகள் இயற்கை வளமும் செயற்கை வசதிகளும் கூடியவை.

சுரங்கங்களுக்கும், இரயில்பாதை போடவும், கட்டிடங்கள் கட்டவும் தேவையான பலவகைப் பொருள்களைத் தரும் அடர்த்தியான காடுகள்,

திராட்சை முதலிய பழத் தோட்டங்கள்,

நிலக்கரிச் சுரங்கங்களுடைய பெல்பாஸ்ட், விட்பேங்கு நகரங்கள்,

இரும்புச் சுரங்கங்களையுடைய பிரிட்டோரியா, வயிரச் சுரங்கங்கள், தங்கச் சுரங்கங்கள் ஆகிய இவை யெல்லாம் அடங்கியது, வெள்ளையர் வாழும் பகுதி.

ஆப்பிரிக்கக் கறுப்பரும் இந்தியக் கறுப்பரும் வாழும் பகுதிகளில் பெரும்பகுதி பண்படாத நிலம். தொழிற்சாலைகளும் அங்கு மிகக் குறைவு. குறிப்பிடத்தக்க தொழில்களாக இருப்பவை கரும்பு, வாழை, கடலை பயிரிடுதல்.

இப்பகுதியில் வளம் குறைந்திருப்பதால் கறுப்பர் மிகவும் கேவலமான வாழ்க்கை நிலையில் இருப்பதாகக் கருதிவிடக் கூடாது. 'பெய்ந்து விளையும் பகுதிகளைவிட காய்ந்து விளையும் பகுதியில்தான்' மக்கள் கூடுதலாக உழைத்து நல்ல வருவாய் பெறுவது உலகெங்கும் நடைமுறையாக உளது.

வெள்ளையர் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட மேற்கொண்டிருக்கும் சூழ்ச்சிகள் ஏராளம்.

பாதுகாப்புச் செலவுக்காக ஆண்டுதோறும் கூடுதலான தொகை செலவு செய்யப்படுகிறது. போலீசாரின் எண்ணிக்கையும் முப்படைகளின் அளவும் ஆண்டுதோறும் பெருக்கப்படுகின்றன. வெள்ளையருக்கு இராணுவப் பயிற்சி கொடுக்கப்படுகின்றது. தொழிற்சங்கம் அமைக்கும் உரிமைகூடக் கறுப்பர்களுக்கு வழங்கப்படவில்லை. ஐரோப்பிய நாடுகளிலிருந்து வெள்ளைக்காரர்கள் குடியேற்றப்படுகிறார்கள். இதனால் புதிதாகக் குடியேறும் மக்களின் நலத்தில் ஈடுபாடு கொண்ட சில ஐரோப்பிய நாடுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தென் ஆப்பிரிக்க அரசுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து வருகின்றன.

தங்க உற்பத்தியின் அளவு மிகுதியாகி வருவதாலும் தங்கத்தின் விலை ஏறி வருவதாலும், தென் ஆப்பிரிக்காவில் தொழில் வளர்ச்சிக்கான சூழ்நிலை பெருகி வருகிறது. இதைப் பயன்படுத்தி, தங்கள் முதலை முடக்கும் வெளிநாட்டாரும் தென் ஆப்பிரிக்க அரசுக்கு உதவியாக உள்ளனர்.

பிரிட்டன், அமெரிக்கா, பிரான்சு, சுவிட்சர்லந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகள் மொத்தம் பத்தாயிரம் கோடி ரூபாய்வரை தென் ஆப்பிரிக்காவில் முதல் போட்டிருக்கின்றன.

**உட்பூசல்**

வெள்ளையர் கூட்டத்தில் உள்ள பிரிவுகளைப்பற்றி ஒருமுறை ஜவஹர்லால் நேருவைச் செய்தியாளர் சிலர் கேட்டனர். பிணம் தின்னும் கழுகுகள் கூடத்தான் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்ளுகின்றன என்று நேரு சொன்னார்.

இந்தச் சண்டையைப்பற்றிச் சுருக்கமாகத் தெரிந்துகொள்வோம்.

டச்சு நாட்டிலிருந்து குடியேறியவர்கள் தான் இப்பகுதிக்கு முதலில் வந்த ஐரோப்பியர். அவர்களுக்குப் போயர் என்ற பெயர் முன்னர் வழங்கி வந்தது. இப்போது ஆப்பிரிக்கன்ஸ் என்ற பெயர் அவர்களுக்கு வழங்கி வருகிறது,

நெப்போலியனின் செல்வாக்குப் பெருகியபோது பிரெஞ்சுக்காரர் நன்னம்பிக்கை முனையைப் பிடித்துக் கொண்டு விடுவார்கள் என்றும் அதனல் இந்தியாவில் ஆங்கிலேயரின் வியாபார ஆதிக்கம் தடைப்படும் என்றும் கவலைப்பட்ட, ஆங்கிலேயர் தங்களுடைய

ஆட்சியைக் கடலோர மாநிலங்களில் திடீரென்று ஏற்படுத்திக்கொண்டார்கள். 1833ல் அடிமை முறையை விலக்கிச் சட்டம் கொண்டு வந்தனர். அடிமை முறையால்தான் போயர்கள் செழிப்பாக வாழ்ந்தார்கள். அவர்களுடைய பண்ணைப் பெருக்கத்துச்கும் செல்வ வளத்துக்கும் இடையூறு ஏற்பட்டதால் அவர்களில் பலர் பிரிட்டிஷ் ஆட்சிப் பகுதிகளிலிருந்து வெளியேறி டிரான்ஸ்வால், சுதந்திர ஆரஞ்சு நாடு ஆகியவற்றில் குடியேறினர். இக்குடியேற்றத்தால் போயர்களுக்கும் உள்நாட்டு மக்களாகிய ஜுலுக்களுக்கும் போர் ஏற்பட்டது. அப்போரில் பிரிட்டன், ஜுலு இனத்தவரின் தாக்குதலினின்றும் போயர்களைக் காப்பாற்றியது.

இந்த உதவிக்குப் பரிசாக, டிரான்ஸ்வால் பகுதியைப் பிரிட்டன் பிடித்துக்கொண்டது. இதை டிரான்ஸ்வால் மக்கள் விரும்பவில்லை. டிரான்ஸ்வால் மக்களின் தலைவர் பால் குரூக்கர் என்பவர். அவரது எதிரி செசில் ரோட்ஸ்.

செசில் ரோட்ஸ் என்பவர் ஆங்கிலேயர். அறிவும் ஆற்றலும் நாடு பிடிக்கும் ஆசையும் நிறைந்தவர். வயிரச் சுரங்கங்கள் கண்டு பிடித்தபோது தென் ஆப்பிரிக்காவில் குடியேறி, பெரிய கோடீசுவரர் ஆனார். ரொடீசியா என்ற ஆப்பிரிக்க நாடு இவர் பெயரால் ஏற்பட்டதே.

ஆப்பிரிக்காவை ஆளுவதற்காகப் பிறந்தவர்கள் ஆங்கிலேயர் என்ற கருத்தை, குரூக்கர் ஏற்கவில்லை. ஜெர்மனியில் சர்வாதிகாரியாயிருந்த கெய்சருடைய சிறு உதவியுடன், குரூக்கர் ஆங்கிலேயருடன் போர் தொடுத்தார். போயர்ப்போர் என்னும் இப்போர்

மூன்றுண்டு நடைபெற்றது. போயர் தோல்வி அடைந்தனர். ஆங்கிலேயரும் இப்போரில் பெரும் சேதம் அடைந்தனர். போர் முடிந்த பிறகு போயர்களுடன் ஆங்கிலேயர் ஓரளவு நல்லுறவுடன் வாழ்ந்தனர்.

**அரசியல் நிலை**

பிரிட்டிஷ் ஆட்சியில் 1814 முதல் இருந்து வந்த தென் ஆப்பிரிக்கா, 1910ல் பிரிட்டிஷ் காமன்வெல்த்துக்கு உட்பட்ட தனி நாடாயிற்று. நிறவெறிக் கொள்கையால் ஐக்கிய நாடுகள் அவையினர் செய்த முடிவுகளைப் பிரிட்டன் ஏற்றுக்கொண்டதால், தென் ஆப்பிரிக்கா வேறு வழியின்றி, பிரிட்டிஷ் காமன்வெல்த்திலிருந்து விலகிக்கொண்டது. 1961 முதல் குடியரசு நாடாக இருந்து வருகிறது.

இக்குடியரசின் பெயர், 'ரிப்பப்ளிக் வான் சுய்டு ஆப்ரிக்கா' என்பதாகும். இந்நாட்டின் தலைநகரம் பிரிட்டோரியா; பாராளுமன்றம் கூடும் இடம் கேப்டவுன். தலைமை நீதிமன்றம் (சுப்ரீம் கோர்ட்டு) ப்ளோயம் பாண்டின் என்னும் சிறு நகரில் கூடுகிறது.

நான்கு மாநிலங்கள் உள்ளன. குறிப்பிட்ட துறைகளில் சட்டம் இயற்றுவ்தற்கு மட்டும் அவைகளுக்கு உரிமை உண்டு. மாநிலங்களும் அவற்றின் தலைநகரங்களும் வருமாறு:—

**கடலோர மாநிலங்கள்**

| | | |
|---|---|---|
| கேப் | ... | கேப்டவுன் |
| நெட்டால் | ... | பீட்டர் மார்டிஸ் பர்க் |

**உள்நாட்டு மாநிலங்கள்**

| | | |
|---|---|---|
| டிரான்ஸ்வால் | ... | பிரிட்டோரியா |
| ஆரஞ்சு பிரீ ஸ்டேட் | ... | ப்ளோயம்பாண்டின் |

நாட்டின் பரப்பளவு 4,72,360 சதுர மைல். இது தமிழ்நாட்டைப்போல் ஒன்பது பங்கு. மக்கள் தொகை ஒன்றே முக்கால் கோடி. ஆட்சி மொழிகளாக ஆப்பிரிக்கன்ஸ் மொழியும் ஆங்கில மொழியும் உள்ளன. பாண்டு இனத்தவர் தங்கள் வீட்டில் எக்ஸ்ஸோ, ஜுலு மொழிகளைப் பேசுகின்றனர்.

**மக்கள்**

இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்கள் ஜுலு இனத்தவர்.

கறுப்பு இனத்தவருள் முக்கியமானவர்கள் ஜுலு என்றசாதியார் ஆவர். இவர்களின் தலைவர் ஆல்பர்ட் லுத்துலி. இவர் தென் ஆப்பிரிக்க அரசின் நிறவெறிக் கொள்கையை முழு மூச்சாக எதிர்க்கிறார். நிறத்தின் அடிப்படையில் காட்டப்படுகின்ற வேறுபாடுகளையும் இழைக்கப்படுகின்ற கொடுமைகளையும் லுத்துலி, காந்தியடிகள் காட்டிய வழிகளைப் பின்பற்றிப் போராட்டம் நடத்தி எதிர்க்கின்றார். காந்தியடிகளைப்போல இவரும் ஆட்சியாளர்களின் சொல்லொணுத் தொல்லைகளுக்கும் சிறைத் தண்டனைக்கும் ஆளாகியிருக்கிறார். அமைதியான முறையில் இவர் தம் மக்களின் உரிமைகளுக்காகப் போராடி வருவதைப் பாராட்டி, இவருக்கு, உலக அமைதிக்கான நோபல் பரிசு நல்கப் பெற்றிருக்கிறது.

கறுப்பர்—ஆப்பிரிக்கக் கறுப்பர் தொகை ஒரு கோடி. இவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் நகரங்களில் வாழ்கிறார்கள். இன்னும் மூன்றில் ஒரு பகுதியினர் சிற்றூர்களில் வெள்ளையரின் பண்ணைகளில் வேலை பார்க்கிறார்கள். எஞ்சியவர்கள் ஒதுக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்து நாகரிகச் சாயலே இல்லாமல்

வெந்த சோற்றைத் தின்று விதி வந்தால் சாவோம் என்ற நிலையில் இருக்கிறார்கள்.

தென் ஆப்பிரிக்க அரசின் இனவெறிக் கொள்கைக்கு ஜுலு இனத்தவர்தான் இடைவிடாது எதிர்ப்புத் தெரிவித்துத் தொடர்ந்தும் உறுதியாயும் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுத் தண்டிக்கப்பட்டவர் தொகை எவ்வளவு என்று புள்ளிவிவரம் கூற முடியாது. ஆனால் தென் ஆப்பிரிக்கச் சிறைகளில் இடமில்லை என்பது மட்டும் தெரிகிறது. வன்முறைச் செயல்களிலும் சதித் திட்டங்களிலும் ஜுலுக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஜுலு ஒதுக்குப்புறம் என்பது ஜுலு இனத்தவர் வாழும் பகுதி. அவர்களுடைய வாழ்க்கை முறை, நீலகிரி மாவட்டத்தில் வாழும் தோதுவர் என்னும் பழங்காலக் குடிமக்களின் வாழ்க்கையைப் போன்றதாகும். மிகவும் தன்னந்தனியே வாழ்வது இவர்களுடைய இயல்பு. வேட்டையாடுவது இவர்களுடைய தலையாய தொழில். இறகுகள், கொம்புகள் ஆகியவற்றைத் தலையில் செருகிக்கொண்டு இவர்களில் சிலர், நகரங்களில் கை வண்டிகளில் ஆட்களை ஏற்றிச் செல்லுகின்றனர்.

இவர்கள் வாழும் குடிசைகளுக்குக் கிரால் என்று பெயர். இவர்கள் மக்காச்சோளமும் சேப்பங்கிழங்கும் நிறைய உண்பர். சாராயம் காய்ச்சுவர். தோட்ட வேலை பார்க்கக் குரங்குகளைப் பழக்கியிருக்கிறார்கள்.

இவர்களுடைய வீட்டு மொழி ஜுலு. இம்மொழியில் சில சொற்களாவன;

முட்டி—மூலிகை

மடும்பி—சேப்பங்கிழங்கு

மாம்பா—பாம்பு

**சமயம்**

வெள்ளை இனத்தவர் கிறித்தவ சமயத்தைப் பின் பற்றுகின்றனர். ஏனையோரில் பாதிப்பேர் கிறித்தவர் கள். இந்துக்கள், முஸ்லிம்கள் தவிர கிறித்தவரல்லாத ஏனையோர் குறிப்பிட்ட சமயக் கொள்கைகளில் பிடிப் பில்லாதவர்கள்.

நாணயம்: இரண்டு தென் ஆப்பிரிக்க ராண்டு ஒரு பிரிட்டிஷ் பவுனுக்கு சமமானது.

ஏற்றுமதிப் பொருள்கள்: தங்கம், வயிரம், உரேனியம், தோல், கம்பளி, உணவுப் பொருள்கள்.

**புவியியல் வளம்**

சுரங்கத் தொழிலில் அமெரிக்கா உலகெங்கும் முதலீடு செய்திருப்பதில் ஐந்தில் இரண்டு பங்கு தென் ஆப்பிரிக்காவில்தான், செய்துள்ளது.

அமெரிக்க வணிகக் குழுக்களுள் தலையாயது 'நியூ மான்ட் மைனிங் கார்ப்பரேசன் அண்டு ஆங்கிலோ அமெரிக்கக் கார்ப்பரேசன் ஆப் சவுத் ஆப்பிரிக்கா' என்பது. இக்குழு தங்கம், வயிரம், செப்பு, யுரேனி யம், நிலக்கரி, ஈயம் ஆகிய பொருள்களைத் தோண்டி எடுக்கிறது. ஆண்டுதோறும் இக்குழுவினர் எடுக்கும் யுரேனியத் தாது எண்பது கோடி ரூபாய் மதிப்பு உள்ளது.

தென் ஆப்பிரிக்காவின் செல்வச் செழிப்பு அனைத் தும் சுரங்கத்தின் வாயிலாக ஏற்பட்டுள்ளது. தங்கமும் வயிரமும் கணக்கின்றிக் கிடைக்கின்றன. நிலக்கரியும் தோண்டி, எடுக்கப்படுகிறது. செப்புச் சுரங்கங்கள்

சில இடங்களில் உள்ளன. அவற்றின் வாயிலாக, அரசினர்க்கு நிறைந்த வருவாய் கிடைக்கிறது.

காந்தியடிகள் ஆசிரமம் அமைத்ததால் போனிக்ஸ் என்னும் சிற்றூர் இந்தியர்களுக்கு நன்கு அறிமுகப்பட்டிருக்கிறது. இவ்வூரின் நாற்பது மைல் சுற்றளவுக்குத் தங்கச் சுரங்கங்கள் உள்ளன. தென் ஆப்பிரிக்காவில் வேறு இடங்களிலும் தங்கச் சுரங்கங்கள் உள்ளன. சில சுரங்கங்களின் ஆழம் ஒன்றே முக்கால் மைல்.

கிம்பர்லி என்னும் இடத்திலும் வேறு பல இடங்களிலும் வயிரச் சுரங்கங்கள் இருக்கின்றன. இந்த வகைச் செல்வத்திலும் தென் ஆப்பிரிக்கா முதலிடம் வகிக்கிறது.

இரண்டாம் உலகப்போரால் ஏற்றம் பெற்றுள்ள யுரேனியம் என்னும் புவியியல் பொருள் உற்பத்தியும் ஏற்றுமதியிலும் தென் ஆப்பிரிக்கா குறிப்பிடத்தக்க நிலையை அடைந்துள்ளது.

நிலக்கரி உற்பத்தியும் மிகுதி. இதன் பயனாக, உலகத்திலேயே குறைந்த விலையில் தென் ஆப்பிரிக்க அரசு மின்சாரத்தை வழங்குகிறது.

இரும்பு, மங்கனீசு, குரோம் ஆகியவையும் தோண்டி எடுக்கப்படுகின்றன.

**மாநிலங்கள்**

இந்த நாட்டிலுள்ள நான்கு மாநிலங்களின் நிலைமையைச் சுருக்கமாகக் கூறுவோம்.

**நெட்டால் மாநிலம்**

இந்தியர்கள் மிகுதியாகவாழும் மாநிலம் இதுவே,

இது கடலோர மாநிலம். உள்நாட்டுப் பகுதிகளில் மலையும் பள்ளத்தாக்கும் இடையிடையே உள்ளன. மலைப்பகுதியின் கூடுதலான உயரம் 10,000 அடி. அதாவது நீலகிரி மலையின் உச்சியைப் போல் ஒன்றரை மடங்கு.

ஆண்டு முழுவதும் இங்கு மழை உண்டு. ஐப்பசி முதல் பங்குனிவரை வேனிற் காலம்; அப்போதுதான் மழை மிகுதியாய்ப் பெய்யும்; மாதம் மும்மாரி பெய்யும் நாடு என்னும் சொற்றொடர் நெட்டால் மாநிலத்துக்குப் பொருந்தும்.

நகர்ப்புறங்களில் பால் பண்ணை, கோழிப்பண்ணை, காய்கறித் தோட்டம் ஆகியவை பெரிய அளவில் நடத்தப்படுகின்றன. டர்பன் துறைமுகத்தையொட்டி, பல தொழிற்சாலைகள் செயல் படுகின்றன.

உயர்ந்த மலைப்பகுதிகளில் சோளம், அவல் போன்ற பொருள்களைப் பயிரிடுவதும், பன்றி வளர்த்தலும் சிறந்த தொழில்களாக உள்ளன. நாலாயிரம் அடிக்கு உட்பட்ட மலைப் பகுதிகளில்—மேட்டுப் பாளையத்துக்கும் குன்னூருக்கும் இடைபட்ட மலைப் பகுதியின் அளவு, 'வாட்டில் பார்க்' எனப்படும். தோல் பதனிட உதவும் பட்டை பெரிய அளவில் பயிரிடப்படுகிறது. தென் ஆப்பிரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் வியபார உறவு இல்லை. எனவே இந்தியாவின் தேவைகளுக்காக, இந்தப் பட்டை நீலகிரி மாவட்டத்தில் பயிரிடப்படுகிறது. மேட்டுப்பாளையத்தில் இப்பட்டையைப் பதனிட ஒரு தொழிற்சாலை ஏற்பட்டிருக்கிறது.

**கேப் மாநிலம்**

கடலோரத்தில் இருப்பதாலும் ஐரோப்பியர் குடியேற்றம் தொடங்கிய இடமாக இருப்பதாலும் இம் மாநிலம் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

கடற்கரைப் பகுதிகளில் மக்கள் நெருக்கம் மிகுதி. பெரும்பாலும், ஆங்கிலேயரே இப்பகுதிகளில் வாழ்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் அவை, தென் ஆப்பிரிக்கா கடைப்பிடிக்கும் நிற வேறுபாட்டுக் கொள்கையைக் கண்டித்திருக்கிறது. பல நாடுகள் தென் ஆப்பிரிக்காவுக்குப் பொருள்களை விற்பதில்லை; பொருள்களை வாங்குவதுமில்லை என்று முடிவு செய்திருக்கின்றன. இந்த முடிவு ஏட்டளவில்தான் இருக்கிறது. இன்றியமையாத பல பொருள்கள் தென் ஆப்பிரிக்காவில் தோண்டப்படுவதால் இந்த நாட்டின் அயல் வாணிகத்தின் அளவு உயர்ந்து கொண்டேபோகிறது. அதையொட்டிக் கேப் துறைமுகமும் அதனையடுத்து உள்ள தொழிற்சாலைகளும் விரிந்த வண்ணமாக உள்ளன.

இம்மாநிலத்தில் கோதுமை, பெரிய அளவில் பயிரிடப்படுகிறது. தரத்தில் சிறந்த மதுவகைகள் செய்வதற்கேற்ற பழங்களும் இங்குள்ள தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. மாட்டிறைச்சிக்கு ஏற்ற மாடுகளை வளர்க்கும் தொழிலும் பரவியுளது.

டேபிள்பே என்ற ஊரில், செயற்கைத் துறைமுகம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.

பிற மாநிலங்களைவிட, கேப் மாநிலத்தில் கறுப்பர் பிரச்சினை சிக்கலாக இருக்கிறது. கேப் மலாயக்காரர் என்ற இனத்தவர் சில ஆயிரம் பேர் உள்ளனர்.

### ஆரஞ்சு பிரீ ஸ்டேட்

இந்த மாநிலத்தில் மக்கள் தொகை மிகக் குறைவாக உள்ளது. குடிப்பதற்குக் கூட, தண்ணீர் கிடைப்பது அருமையாக இருக்கிறது. உணவுப் பொருளாகச் சோளம் மட்டுமே பயிரிடப்படுகிறது.

நவரத்தினங்களும் வயிரங்களும் இங்குள்ள சுரங்கங்களில் கிடைக்கின்றன.

1830-ம் ஆண்டுக்கு முன் இந்த மாநிலம் சில ஆயிரம் ஜுலு முதலிய ஆப்பிரிக்க இனத்தவர் மட்டும் வாழும் காடாக இருந்தது. 1830-க்கும் 1840-க்கும் இடையே கேப் மாநிலத்திலிருந்து டச்சுக்காரர் பெருந்தொகையாக இங்கு வந்து குடியேறினர், அந்நாளில் அவர்களுக்குப் போயர் என்ற பெயர் இருந்து வந்தது.

போயர் குடியேற்றத்தை வேண்டாத ஜுலுக்கள் அவர்களில் பலரைக் கொன்றனர்.

1868-ல் இங்கு வயிரம் கண்டு பிடிக்கப்பட்டது. 1871-ல் இந்தத் தொழிலில் செசில் ரோட்ஸ் முனைந்தார். அதன் பிறகு, இந்தப் பகுதி விரைந்த முன்னேற்றம் அடையலாயிற்று.

1907-ல் இந்தப் பகுதிக்குச் சுயஆட்சி கொடுக்கப்பட்டது. அதனால் சுதந்தர ஆரஞ்சு நாடு என்ற பெயர் இப் பகுதிக்கு வழங்கலாயிற்று. 1910-ல் இது, தென் ஆப்பிரிக்க ஐக்கியத்தில் இணைந்து, ஒரு மாநிலம் ஆயிற்று.

### டிரான்ஸ்வால்

இது உள்நாட்டுப் பகுதியில் உள்ள மாநிலம். டச்சு நாட்டிலிருந்து குடியேறியவர்கள் செல்வாக்கு நிறைந்த

கூட்டமாக உள்ளனர். சிலகாலம் இது சுதந்திர போயர் அரசாக விளங்கிற்று.

இம்மாநிலத்தின் பரப்பு, தமிழ்நாட்டைப் போல் இரண்டு பங்கு ஆகும். சுரங்கங்களும் தொழிற்சாலைகளும் ஏராளமாய் இருப்பதால் நீக்ரோக்கள், ஜுலுக்கள் ஆகிய இனத்தார் அவற்றில் வேலை பார்த்துப் பிழைக்கிறார்கள்.

தென் ஆப்பிரிக்க அரசின் அலுவலகங்கள் இம் மாநிலத்தில் உள்ள பிரிட்டோரியாவில் இருக்கின்றன. தலைநகராய் விளங்கும் இவ்வூர் ஐந்து லட்சம் மக்கள் கொண்டது. போயர்ப் போரில் இந்நகரம் சிறப்பிடம் பெற்றது.

ஜோஹனஸ்பர்க் மாநகரம் இங்கிருந்து 52 கி. மீ. தொலைவில் உள்ளது.

## நகரங்கள்

தென் ஆப்பிரிக்காவின் நகரங்கள். அந்நாட்டின் வாழ்வில், பிறநாடுகளின் நகரங்களைவிட மிகக் கூடுதலான சிறப்பைப் பெற்றுள்ளன. அவற்றைக் காண்போம்.

## டர்பன் மாநகரம்

நீரூற்றுக்களும் பூச்செடிகளும் நிறைந்த தோட்டங்களையும், இயற்கையான கடற்கரையையும், எல்லா வயதினரும் விளையாடி மகிழத்தக்க வசதிகளையும், சுத்தமான சாலைகளையும் உடையது இந் நகரம். நெட்டால் மலைமீது கட்டப்பட்டிருப்பதால் இந் நகரின் பகுதிகள் அடுக்கடுக்காக அமைந்து மின் ஒளியில் கண்ணைப்பறிக்கும் காட்சியைத் தருகின்றன. இயற்கையான மேடு பள்ளமான அமைப்பைப் பயன்

படுத்திக் கொண்டு மாநகராட்சியினர் நீர்க்கழிவு ஏற்பாடுகளைத் திறம்படச் செய்துள்ளனர்.

டர்பனில் 25,000 தமிழர் வாழ்கின்றனர். வியாபாரிகள் சிலர். கரும்பு, வாழைத் தோட்டக்காரர் பலர். பொழுது போக்குக்கு ஏராளமான நிலையங்களை இவர்கள் அமைத்துக் கொண்டிருக்கின்றனர். இந்நகரில் தமிழர்க்குரிய கோயில்கள் உள்ளன. சிவானந்த ஆசிரமத்தின் டர்பன் கிளை நிலையம் ஆன்மிக உணர்வை அங்குள்ளவரிடம் பரப்பி வருகிறது. அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றி இந்நிலையம் அரியதொரு நூலை வெளியிட்டிருக்கிறது. இந்த நூல் ஆங்கிலத்தில் தான் உள்ளது. தமிழ்ப் பண்பாடும் தமிழ் நாட்டில் ஈடுபாடும் இருந்தபோதிலும் இவர்களில் பலருக்குத் தாம் விரும்புகிறஅளவு தமிழ் இலக்கிய அறிவு இல்லை. இத்தகைய பல நூறாயிரம் தமிழர்கள் தமிழ்நாட்டிலும் உள்ளனர், அல்லவா?

பொருளாதார நிலையில் தென் ஆப்பிரிக்காவில் உள்ள எல்லோரையும் போலவே டர்பன் தமிழரும் செழிப்பாகவும் கவலையின்றியும் இருக்கிறார்கள். அவர்களுடைய கவலையெல்லாம் நிறப்பாகுபாடு சட்டத்தைப் பற்றித்தான். இந்தச் சட்டங்கள் ஐரோப்பியரை எவ்விதத்திலும் கட்டுப்படுத்துவதில்லை. ஆகையால் சில வெள்ளைக்காரர்கள் கறுப்பர் பகுதிக்கு வந்து தமிழர் சமைத்த கறியும் சோறும் உண்ணுகின்றனர். நாக்குக்கு நிறவேறுபாடு தெரியாது!

''உயர்ந்தவர் என்ன ?
தாழ்ந்தவர் என்ன ?
உடல் மட்டுமே கறுப்பு
அவர் உதிரம் என்றும் சிவப்பு''

**கேப் டவுன்**

கேப் என்பது ஒரு நாட்டின் அல்லது ஒரு தீவின் அகன்ற பரப்புச் சுருங்கி இரு திக்குகளிலும் உள்ள கடற்கரைகள் இரண்டறக் கலக்கும் முனையாகும். கேப் என்னும் சொல் இந்தியாவில் கன்னியாகுமரி முனையையும் ஆப்பிரிக்காவில் நன்னம்பிக்கை முனையையும் குறிக்கின்றது.

நன்னம்பிக்கை முனைக்கு அருகே உள்ள நகரம் கேப்டவுன் என்னும் துறைமுகப்பட்டினம், சூயஸ் கால்வாய் வெட்டப்படுவதற்கு முன்னர் இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் இவ்வழியாக மட்டுமே கப்பல்கள் சென்றன. அரசியல் குழப்பங்களால் சூயஸ் கால்வாயைப் பயன்படுத்துவது தடைப்படும்போதெல்லாம் மீண்டும் இவ்வழியாகத் தான் கப்பல்கள் செல்லுகின்றன.

ஒரு பக்கம் மலையைப் பின்னணியாகக் கொண்டிருப்பதால் கடலோரத்தில் அமைந்திருக்கும் கேப் நகரம் கவர்ச்சியாக இருக்கிறது. உலகத்திலேயே வியக்கத்தக்கவாறு ஆயிரமாயிரம் மலர்ச் செடிகள் இவ்வூர்ப் பூங்காவில் வகைப்படுத்தியும் தொகைப்படுத்தியும் வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பூங்காவில் எத்தனை மணி நேரம் தங்கியிருந்தாலும் அலுப்பும் ஏற்படாது; சலிப்பும் தோன்றாது. இந்நகரில் உள்ள பல்கலைக் கழகம், கட்டிடங்களின் கவினுறு அமைப்பாலும் கவிதையுணர்வைத் தூண்டும் காட்சிகளாலும் கற்பிக்கப்படும் கல்வியின் தரத்தாலும் புகழ் பெற்றது.

இவற்றையெல்லாம் விட இந்நகரைக் காண வருபவர்களை ஈர்ப்பது தெருக்களின் தூய்மை. இந்நகர

அடுத்துள்ள புகையிலைத் தொழிற்சாலைகள், கோதுமை அறைவைச் சாலைகள், பழங்களைப் பக்குவப்படுத்தும் நிலையங்கள் ஆகியவற்றிலும் தூய்மையான இந்நிலை இம்மியும் குறைவுபடாமல் காணப்படுகிறது.

**ஜோஹனஸ்பர்க்**

*1886*-ம் ஆண்டு, தென் ஆப்பிரிக்காவின் வரலாற்றில் பொன் எழுத்துக்களில் பொறிக்கத்தக்கது. பொன்னும் வயிரமும் கண்டெடுத்த ஆண்டு அதுவே.

தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் உருவான நகரம், ஜோஹனஸ்பர்க். பழுப்புநிலக்கரி கண்டுபிடிப்பால் நெய்வேலியும், மைசூர் மாநிலத்தில் தங்கம் தோண்டியதால் உருவான கோலாறு நகரமும் போன்றது ஜோஹனஸ்பர்க்.

பொருளாதார வளர்ச்சியால், இரயில் பெட்டிகள், பண்ணை இயந்திரங்கள், எஃகுப் பொருள்கள் ஆகியவற்றைச் செய்யும் பெரிய தொழிற்சாலைகளும் இந்நகரின் அருகே பல்கிப் பெருகிவிட்டன.

இங்கு வாழும் இந்தியர்களை 22 மைலுக்கு அப்பாலுள்ள ஒரு குடியிருப்புக்கு அப்புறப்படுத்த, தென் ஆப்பிரிக்க அரசினர் திட்டமிட்டு அத்திட்டத்தைப் படிப்படியாக நிறைவேற்றியிருக்கின்றனர்.

குஜராத்திய வணிகர் இந்நகரில் காந்தியடிகள் பெயரால் ஒரு மண்டபம் கட்டியுள்ளனர். இவர்கள் நடத்தும் கத்தியவார்ச் சங்கம் செல்வாக்கும் செல்வமும் உடையது.

**அன்றாட வாழ்க்கை**

பஸ்களிலும் இரயில்களிலும் வெள்ளையருக்கும் கறுப்பருக்கும் தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவரவர்களுக்குக் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே அந்தந்த இனத்தவர் இருக்கவேண்டும்.

சிறுவர் பள்ளிக்கூடம் முதல் பல்கலைக்கழகம் வரை ஒவ்வொரு நிறத்தாருக்கும் தனித்தனியே கல்வி நிலையங்கள் உள்ளன.

கிறித்தவ தேவாலயங்கள் ஒவ்வொரு நிறத்தாருக்கும் தனியே உள்ளன. சில தேவாலயங்களில், வெள்ளைத்தோல் உடையவர்கள் வழிபடுவதற்குரிய நேரம் இன்னது என்றும் கறுப்புத்தோல் உடையவர்கள் வழிபடுவதற்குரிய நேரம் இன்னது என்றும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. வழிபாடு நடத்தும் பாதிரியாரின் நிறமும் மாறுபடும். வழிபடுபவர் உட்காரும் பலகையின் நிறம் மட்டும் மாறுது!

ஒவ்வொரு நகரத்திலும் வெள்ளையர் பகுதி என்றும் கறுப்பர் பகுதி என்றும் தனித்தனியே உள்ளன. வெள்ளையர் பகுதியில் எந்தவிதமான வேலையும் செய்ய, கறுப்பர்களுக்கு உரிமை கிடையாது. அங்கு இயங்கும் பஸ் அல்லது டிராம்காரை, கறுப்பர்கள் ஓட்டமுடியாது.

இரயில் நிலைய மேடைகள் (பிளாட்பாரங்கள்) கூட, தனித்தனியே அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆகாய விமான நிலையங்களிலும் இருநிறத்தாரும் தங்கும் இடங்கள் வெவ்வேறு கறுப்பர் தங்குமிடங்களில் மனிதனின் தன்மானத்தை இழிவுபடுத்தும் முறையில் வசதிக்குறைவான அமைப்புக்கள் இருக்கின்றன.

**விளையாட்டுக்கள்**

குடியிருப்புக்களிலும் தொழிற்சாலைகளிலும் பிரிவினைச் சட்டம் அமலில் உள்ளது. கால்பந்து, கிரிக்கெட், ஆக்கி விளையாட்டு நிகழ்ச்சிகளிலும் வெள்ளையர், இந்தியர், கறுப்பர்களுக்குத் தனித்தனிச் சங்கங்கள் உள்ளன. ஆக்கிப் போட்டியில் அடுத்தடுத்து பாப்புவா என்ற இந்திய வீரர் ஒருவர் வெள்ளைக்கார வீரர்களையெல்லாம் தோற்கடித்துத் தென் ஆப்பிரிக்காவிலேயே தலைசிறந்த ஆக்கி வீரராகக் கருதப்பட்டார், இந்தியரால் மட்டுமேயன்றி வெள்ளையராலும் பாராட்டப்பெற்ருர். உடனே தென் ஆப்பிரிக்க அரசு இனிமேல் வெள்ளையருடன் வேறு இனத்தவர் விளையாட்டிலும்கூடப் போட்டி போடக்கூடாது என்று ஆணை பிறப்பித்துவிட்டது தென் ஆப்பிரிக்கச் சட்டப்படி, வெள்ளையரும் வெள்ளையர் அல்லாதாரும் சேர்ந்து விளையாடக்கூடாது. இதனுல் உலகநாடுகளுக்கிடையே விளையாட்டுத் துறையில் பெரிய போட்டிகளை நடத்தும் ஒலிம்பிக் ஆட்டக் குழுவினர் தங்கள் போட்டிகளில் தென் ஆப்பிரிக்கா கலந்துகொள்வதைத் தடை செய்துள்ளனர்.

நிறவெறிக் கொள்கை, கடற்கரையையும் விட்டு வைக்கவில்லை. இதைப்பற்றி, திருவாசகமணி கே.எம். பி. அவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்கள்:

"கடற்கரையில்சென்று சகலநிறத்து மக்களும் காலையிலும் மாலையிலும் உச்சியிலும்கூட நீரிற் குளித்தும் மணலிற் படுத்தும் இன்பப் பொழுது போக்கில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனுல், எல்லா இனத்தவரும் ஒரே துறையில் சென்று ஒன்ருகக் கூடி இவ்வாறு இன்பம் அனுபவிக்க முடியாது

அந்நாட்டுச் சட்டப்படி. நம் நாட்டில் முன்பெல்லாம் ஆற்றுப் படித்துறைகளில் ‘அபாரத்தீட்டு’ச் சட்டப்படி தனித்தனிப் படித்துறைகள் இருக்கவில்லையா? தில்லை நாயகம் பிள்ளை படித்துறைத் தகராறு திருச்சிவாசிகள் சிலருக்காவது நினைவிருக்குமல்லவா? தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர் பீச்சு, கறுப்பர் பீச்சு, இந்தியர் பீச்சு என்று கடற்கரையில் மூவகைப் பிரிவினைகள் ஏற்பட்டுள்ளன.

சினிமாக்களை அங்கே பயாஸ்கோப் என்ற பழைய பெயரிட்டே அழைக்கின்றனர். வெள்ளையருக்கென்றே தனிப்பட்ட சினிமாக் கொட்டகைகளில் காக்கைகூடப் பகலிலோ இரவிலோ நுழையக்கூடாது. ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் கொஞ்சம் தாராள மனப்பான்மையைக் காட்டி வருகிறார்கள். வெள்ளையர் கண்டுகளிக்கும் திரைப் படங்களிலே கறுப்பு மனிதர் நடிப்பதை மட்டும் ஆட்சேபிக்கவில்லை.

வெள்ளையர்களில் ஆயிரக் கணக்கானவர்கள் இந்தியர்கள்பாலும் கறுப்பர்பாலும் மரியாதை, பரிவு, நட்பு, சகோதரத்துவம் காட்டியும் பாராட்டியும் அந்நாட்டுச் சட்டத்தின் முள் முனைகளின் கூர்மையை ஒடிந்து எறிகின்றனர்.

நான்கு கறுப்பர்கள் தங்கள் உயிரைக் கொடுத்து ஒரு யந்திர சாலையின் ‘போர்மன்’ ஆகிய வெள்ளையன் ஒருவனுடைய உயிரைக் காப்பாற்றுகின்றார்கள். ஒரு கறுப்பன் கடலில் மூழ்கி இறக்கும் தருவாயில் தத்தளிக்கிறான். இரண்டு வெள்ளையர்கள் தம் உயிரை மதியாது

நீரில் குதித்து நீந்தி, அவனை உயிருடன் கரை சேர்க்கின்றனர். சர்க்காரால் அபராதம் இடப் பட்ட இந்தியன் ஒருவன் ஏழை; அவன் கட்ட வேண்டிய அபராதத் தொகையை முதுமை மிக்க வெள்ளை மாது ஒருத்தி கட்டிவிடுகிருள். பட்டப் பகலில் நடுக்கடைத்தெருவில் கர்ப்பவதியா யிருந்த கறுப்புப் பெண் ஒருத்தி திடீரென்று பிரசவ வேதனையடைகிருள். அங்கே உள்ள மோட்டார்க் கம்பெனியொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த ஐரோப்பிய மாது ஒருத்தி இதைக் கண்டு துள்ளி ஓடித் துணை செய்து அவள் குழந்தை பெறுவதை நிறைவேற்றுவிக்கிருள். இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள் மக்களின் ஆன்மநேய ஒருமைப்பாட்டை, தென் ஆப்பிரிக்காவிலும் நிலை நாட்டிக் காட்சியளிக்கின்றன.''

**பல்சுவை**

**சமையலுக்குப் பயன்படுவது சூரியகாந்தி எண்ணெய்.**

**காலநிலை:** டிசம்பர்த் திங்களில், இந்நாட்டில் கடுங் கோடை இருக்கும். பன்னீர் கலந்த ஒருவகை மருந்தை உடலில் தடவிக்கொண்டுதான் அந்நாளில் கடற் கரையில் காற்று வாங்குவர்.

**தென் ஆப்பிரிக்காவில் இருப்பவை:** முதலை நிறைந்த ஆறுகள். (உத்தரப் பிரதேசத்தில் அயோத்தி நகரி லுள்ள ஆறு, இத்தகையதே.)

**தென் ஆப்பிரிக்காவில் இல்லாதது:** எருமை. தெருக் களில் ஆடு, மாடு, நாய், பூனை திரிவது நகரங்களில் தடை செய்யப்பட்டிருக்கிறது.

## ஐரோப்பியரும் இந்தியரும்

ஆப்பிரிக்காக் கண்டத்தின் மொத்த மக்கள் தொகை 25 கோடி. இதில் ஐரோப்பியர் தொகை 60 லட்சம். இந்த 60 லட்சம் பேரில் 35 லட்சம் பேர் தென் ஆப்பிரிக்காவில் வாழ்கின்றனர். இன்னும் 12 லட்சம்பேர் தென் ஆப்பிரிக்காவைச் சுற்றியுள்ள சிறு நாடுகளில் வாழ்கின்றனர். இதிலிருந்து தென் ஆப்பிரிக்காவில் ஐரோப்பியரின் ஆதிக்கமும் பிடிப்பும் எந்த அளவுக்கு உள்ளது என்பதை அறியலாம்.

இவ்வாறே இந்தியருக்கும் தென் ஆப்பிரிக்கா மிக முக்கியமானது. இங்கு 5 லட்சம் இந்தியரும் ஆப்பிரிக்காவின் ஏனைய பகுதிகளிலெல்லாம் 7 லட்சம் இந்தியரும் உள்ளனர்.

## காந்தியடிகள்

தென் ஆப்பிரிக்க இந்தியருள் குஜராத்தியரும் தமிழரும்தான் முக்கியமானவர்கள். பெரிய வணிக நிலையங்கள் குஜராத்தியரிடம் உள்ளன. நகரங்களிலெல்லாம் அவர்களுடைய அமைப்புக்கள் வலுவாக உள்ளன. அரசினர் உதவியுடன் அவர்கள் குஜராத்திப் பள்ளிகள் பலவற்றை நடத்துகிறார்கள். குஜராத்தி வணிகர் ஒருவருக்கு வழக்காடுவதற்காக மகாத்மா காந்தி 1893-ல் தென் ஆப்பிரிக்காவுக்கு வந்தார்.

1893 முதல் 1908 வரை காந்தியடிகள் வழக்கறிஞராகவும் தென் ஆப்பிரிக்க இந்தியரின் தலைவராகவும் விளங்கினார். 1908 முதல் 1915 வரை ஆப்பிரிக்க அரசியல் அலுவலகங்களில் மட்டுமே அவர் ஈடுபட்டார்.

நெட்டால் இந்தியக் காங்கிரஸ் என்ற அமைப்பையும் டிரான்ஸ்வால் பிரிட்டிஷ் இந்தியச் சங்கம் என்ற

அமைப்பையும் காந்தியடிகள் நிறுவினர். தென் ஆப்பிரிக்க இந்தியருடைய குறைகளை இந்திய அரசுக்கு எடுத்துச் சொல்லுவதற்காக, அவர் 1896-ல் இந்தியாவுக்கு வந்து போனர்.

1899-ல் போயர்ப் போர் நடைபெற்றபோது காந்தியடிகள் அந்தப் போரில் காயப்பட்டவர்களுக் கெல்லாம் உதவுவதற்காக இந்திய ஆம்புலன்ஸ் படை ஒன்றைத் திரட்டினர்.

இந்தியர்களுடைய கருத்துக்களை, தென் ஆப்பிரிக்க அரசுக்குத் தெரிவிக்க இந்தியன் ஒப்பினியன் என்ற வார இதழைத் தொடங்கினர். இது தமிழ்மொழி உள்பட நான்கு மொழிகளில் வெளியிடப்பெற்றது.

போனிக்சில் ஓர் ஆசிரமத்தை நிறுவி, காந்தியடிகள் அங்கு அறப் போராட்டத்தையும் தொடங்கினர்.

நெட்டாலில் இந்தியருக்கு வழிகாட்ட தீனபந்து ஆண்டுருசின் நட்பைப் பயன்படுத்திக்கொண்டார். 1912ல் கோகலே பெருமகனைத் தென் ஆப்பிரிக்கா வுக்கு வரவழைத்துக் கொண்டார்.

1921ல் பிரிட்டிஷ் சாம்ராச்சிய மாநாடு நடை பெற்றது. அம் மாநாட்டில் தென் ஆப்பிரிக்க இந்தி யரின் குறைகளை மாகனம் சீனிவாச சாஸ்திரியார் வாயிலாக எடுத்துரைக்க, காந்தியடிகள் ஏற்பாடு செய் தார். சாஸ்திரியாருக்கும் தென் ஆப்பிரிக்கத் தலைமை அமைச்சர் ஸ்மட்சுக்கும் அம் மாநாட்டில் கடுமை யான சொற்போர் நடந்தது.

தென் ஆப்பிரிக்காவுக்கு இந்திய அரசு ஏஜெண்ட் ஜெனரல் ஒருவரை நியமிக்க வேண்டுமென்றும் முதன் முறையாக இந்திய ஏஜெண்ட் ஜெனரலாக மகாகனம் சீனிவாச சாஸ்திரியாரை அனுப்ப வேண்டுமென்றும்

மகாத்மா காந்தியடிகள் சொன்னார்கள். ஆங்கிலேய அரசு, அடிகளின் இக்கருத்தை 1929-ல் ஏற்றது.

அப்போதுதான் சாஸ்திரியார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தலைவராக (துணைவேந்தராக) நியமிக்கப்பட்டிருந்தார். அவ்வேலையை ஏற்காமல், காந்தியடிகளின் விருப்பத்தை நிறைவேற்ற, சாஸ்திரியார் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றார். ஆறுண்டுக்காலம் அங்கே அரும்பணியாற்றி, தென் ஆப்பிரிக்க இந்தியருக்கு சாஸ்திரியார் நல்வழி காட்டினார். கல்வி வளர்ச்சியில் அவர்களை ஈடுபடுத்தினார். பணம் திரட்டி, டர்பன் மாநகரில் இந்திய மாணவருக்காக ஒரு கல்லூரி நிறுவினார்.

தென் ஆப்பிரிக்க இந்தியருக்கு ஒரு வரலாறு படைத்த காந்தியடிகள் பரந்த இந்திய அரசியலில் ஈடுபடுவதற்காக 1915ல் தாயகத்துக்குத் திரும்பினார். உடனே அவர் சென்னைக்கு ,வந்து பலநாள் தங்கினார். தென் ஆப்பிரிக்கத் தொடர்புடைய தமிழ் நாட்டுப் பகுதிகளுக்கும் சென்றார்.

1915 ஏப்ரல் 12ல் விக்டோரியா பப்ளிக் ஹாலில் சென்னை வாசிகள் டாக்டர் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் தலைமையில் கூடி, காந்தி தம்பதிகளை வரவேற்றார்கள். காந்தியடிகள் அந்த வரவேற்புரைக்குப்பதில் சொல்லும்போது, தமிழர்கள் தென் ஆப்பிரிக்காவில் செய்த தியாகங்களைச் சிறப்பாகக் குறிப்பிட்டார்.

பதினேழு, பதினெட்டு வயதான நாகப்பனும் நாராயணசாமியும் எத்தனை கஷ்ட நஷ்டங்களையும் அவமானங்களையும் தாங்கித் தாய்நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்ற முயன்றார்கள் என்பதை அவர் எடுத்துரைத்தார். பதினேழு வயதுப் பெண்ணான

வள்ளியம்மை மாரிட்ஸ்பர்க் சிறையிலிருந்து எலும்புந் தோலுமாக விடுதலையடைந்து அப்படியே ஜுரம் பிடித்துப் பாயும் படுக்கையுமாகி மரணம் என்ற அந்த விடுதலையும் பெற்றுவிட்டாள் என்று எடுத்துக்காட்டிய காந்திமகான், தென் ஆப்பிரிக்காவில் மற்ற இந்தியர்களைக் காட்டிலும் தமிழர்களே சட்ட மறுப்பில் கூடுதலான பங்கு கொண்டனர் என்றார். எட்டு ஆண்டுகளாக நீடித்து நடந்து வந்த அந்தப் போராட்டக் காலத்திலே சிறை செல்லாததுதான் அவமானம் என்று தென் ஆப்பிரிக்கத் தமிழர்கள் கருதினராம்.

அந்தத் தமிழர்களின் கடவுள் நம்பிக்கையும் தியாகமுமே தமக்கும் அந்த இயக்கத்திலே வழி காட்டின என்றார். அவர்களுக்குச் சூட்டவேண்டிய கிரீடத்தைத்தான் சென்னை அப்போது தமக்கும் தமது மனைவிக்கும் அளித்தது என்றார், காந்தியண்ணல்.

**இந்தியர்**

தென் ஆப்பிரிக்க இந்தியர் எல்லோருமே 1860 அளவில் இந்தியாவிலிருந்து குடியேறியவர்களின் வழித் தோன்றல்கள் ஆவர். அதற்குப் பிறகு இந்தியாவிலிருந்து சென்றவர்கள் சில ஆயிரம் பேர்தான் இருப்பர்.

தமிழ், தெலுங்கு, இந்தி, குஜராத்தி, உருது ஆகிய மொழிகள் பேசுபவர்கள் தென் ஆப்பிரிக்காவில் வாழ்கின்றனர். ஆனல் அவர்களுள் மொழி அல்லது சமய அடிப்படையில் பூசல் ஏற்பட்டதில்லை.

மேலைநாட்டுக் கல்வி முறையே இங்கு நிலவுகிறது. அரசினர் நடத்தும் கல்வி நிலையங்களிலேயே இந்தியரும் கல்வி பயிலுகின்றனர். பாடமொழி ஆங்கிலம். ஆப்பிரிக்கான் என்ற அந்நாட்டு ஆட்சி மொழியும்

கற்பிக்கப்படுகிறது. எனினும், இந்தியர் என்ற உணர்வு இவர்களிடம் சிறிதும் குன்றவில்லை.

காரணம், மாலை நேரங்களில் மாணவர்கட்குத் தமிழ், தெலுங்கு, உருது மொழிகளைக் கற்பிக்க, தனியார் மன்றங்களும் குழுக்களும், பள்ளிகள் நடத்துகின்றன.

சமூகப் பணிகளில் ஈடுபட இந்தியர் பல மன்றங்களை நிறுவியுள்ளனர். இசை, நடனம், புராண அடிப்படையான நாடகங்கள் ஆகிய நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெறுகின்றன. சிந்தாமணி நாடகக் குழு, கீதா தியேட்டர் கம்பெனி, ஜெய்ஹிந்த் நாடகமண்டல் ஆகிய குழுக்கள் சிறப்பாக இயங்குகின்றன. அரிச்சந்திரன் கதை, நல்லதங்காள் கதை, கோவலன் கதை, வள்ளி திருமணம், மார்க்கண்டேயர் வரலாறு ஆகிய நாடகங்கள் நடைபெறுகின்றன. ஆங்கிலத்தில் தாகூரின் நாடகங்களும், காளிதாசரின் நாடகங்களும் நடிக்கப்படுகின்றன. தெருக் கூத்துக்களுக்கும் குறைவில்லை.

திரைப்படங்களும் புதிய இசைத் தட்டுக்களும் அடிக்கடி இந்தியாவிலிருந்து வருகின்றன. இவற்றைப் பின்பற்றிப் பல பாடகர்கள் பாடுகின்றார்கள். நடராசர், ரஞ்சனி, மோகினி, பாரதி, திருவிதாங்கூர் என்ற பெயர்களில் இசைக் குழுக்கள் தென் ஆப்பிரிக்காவில் உள்ளன. இவற்றின் தொகை நாற்பது.

கோயில் இல்லா ஊரில் நம்மவர்கள் குடியிருப்பார்களா என்ன?

கீழ்க்கண்ட கோயில்கள் குறிப்பிடத்தக்கன:

டர்பன் நகரம்: அம்கனிச்சாலை வைத்திய நாதேசுவரர் ஆலயம்,அம்பிலோச்சாலை அம்பலவாணேசுவரர்

ஆலயம், கிளேர்வுட் சுப்பிரமணியர் ஆலயம், கேடோ மேனர் முத்திலிங்கேசுவரர் ஆலயம்.

பீட்டர் மாரிட்ஸ்பர்க்: சிவசுப்பிரமணியர் கோயில்,

ஜோஹனஸ்பர்க்: மெல்ரோஸ் சிவசுப்பிரமணியர் கோயில்,

டோங்காட்: சிவசுப்பிரமணியர் கோயில்.

ஸ்டாங்கர்—சிவாலயம்

பிரிட்டோரியா—மாரியம்மன் கோயில்

இஸிப்பிங்கோ—மாரியம்மன் கோயில்

நியூலண்டன்—காமாட்சியம்மன் கோயில்

அம்சிண்டோ—பெருமாள் கோயில்

முஸ்லீம் மசூதிகளும், பௌத்தர் வழிபடும் கோயில்கள் உள்ளன. தீபாவளி, ராமநவமி, சிவ்ராத்திரி, கிருஷ்ணஜெயந்தி, பொங்கல், பிள்ளையார்சதுர்த்தி, நவராத்திரி, ஈத், மொகரம் ஆகிய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. சிறப்பான விழாக்கள் முருகனுக்கு எடுக்கும் காவடி ஆட்டமும் தீயின்மீது நடந்து செல்வதைச் சிறப்புப் பகுதியாக உடைய அக்னி விழாவும் எனலாம்,

நம் பண்பையும் தொன்மைப் பழக்க வழக்கங்களையும் நிலைநாட்டி வரும் பெருமை பெண்களுக்கே உரியது. வண்ணப் பொலிவுக்கும் நெசவாளரின் கைவண்ணத்துக்கும் சான்முக விளங்கும் சேலைகளைக் கண்டு மகிழாதார் யார்?

பல இந்திய நிறுவனங்கள் ஆண்டுதோறும் ஒரு கலைவிழா (Eisteddfod) நடத்துகின்றன. நெட்டால் தமிழ் வைதீக சபை நடத்துகிற இவ்விழாவைப்பற்றி மட்டும் சிறிது கூறுவோம்.

நமது பண்பாட்டைத் தென் ஆப்பிரிக்கா வெங்கும் வேரூன்றச் செய்வது இவ்விழாவின் குறிக்கோளாகும். சிற்றூர்கள், வட்டங்கள், மாவட்டங்கள், மாநிலங்கள் என்ற அடிப்படையில் பல்வேறு கலைகளில் ஆற்றல் பெற்றவர் ஆங்காங்கு நடை பெறும் போட்டிகளில் கலந்து கொள்வர். நான்கு திங்கள்களுக்கு நடை பெறும் இப்போட்டியின் இறுதிக் கட்டத்தில் இசை, நடன நாடகத்துறைகளில் தலை சிறந்தவர்கள் டர்பன் நகரில் தேர்ந்தெடுக்கப்பெற்று அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பெறுகின்றன.

இந்தியாவுக்கு வந்து, இந்தியக் கலைஞரிடமே அக்கலைகளை நன்கு பயின்று தங்கள் திறமைகளை மேலும் வளர்த்துக் கொண்டும் பெருக்கிக் கொண்டும் தென் ஆப்பிரிக்காவுக்கு மீண்டும் வந்து தங்களுடைய கலைப் பணிகளை இன்னும் சிறப்பாகச் செய்யவேண்டு மென்று ஆங்குள்ள பலர் விரும்புகிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் அதற்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஒரு சிலர் மட்டும் இந்திய அரசினர் அல்லது ஏதேனும், ஒரு மன்றத்தின் உதவி பெற்று இந்தியாவுக்கு வந்து சில மாதங்கள் பயிற்சி பெறுகின்றனர்.

தென் ஆப்பிரிக்கத் தமிழர்களிடம் இப்போது சாதிமுறை நிலவுவதாகச் சொல்ல இயலாது. ஆனால் அவர்களுடைய பெயர்களில் சாதிப் பெயர்கள் மட்டுமே இருந்து வருகின்றன. சான்று பி. ஆர். பத்தர், டி. எஸ். பிள்ளை, வி. கே. நாயுடு, சி. சி. செட்டி, டி. எம். நாயக்கர், வி. எம். ரெட்டி, எம். எம். முதலி, வி. ஜி. படையச்சி, கே. வி. நாடார்.

இடையிடையே அருதர் குப்புசாமி, லில்லி லலிதா போன்ற பெயர்களும் வழங்கி வருகின்றன.

தென் ஆப்பிரிக்கத் தமிழர்கள் சமயப்பற்றும் தமிழ்ப்பற்றும் உடையவர்கள். ஆனல் இந்தத் துறைகளில் சிலருக்கேனும் ஆழ்ந்த அறிவு இருப்பதாகச் சொல்லிவிட முடியாது. கடந்த சில ஆண்டுகளாக அருட்பாக் கழகங்கள் ஏற்பட்டுள்ளன. தமிழ் நூல்கள் உள்ள நூல் நிலையங்களும் ஏற்பட்டிருக்கின்றன. திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் 1963ல் அங்கே விரிவாகச் சுற்றுப்பயணம் செய்ததன் பயனுய் அவர்களில் பலரிடையே சைவ சித்தாந்தத்தில் ஆழ்ந்த பற்றும் தமிழ் மொழியை நன்கு பயில வேண்டுமென்ற அவாவும் ஓரளவு ஏற்பட்டிருப்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. 1950ல் இந்தியாவுக்கும் தென் ஆப்பிரிக்காவுக்கும் அரசியல் உறவு அறுபட்ட பிறகு இந்திய அரசினரின் இசைவு பெற்றுத் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்ற அறிஞர் திருவாசகமணி ஒருவரே.

தென் ஆப்பிரிக்கத் தமிழர்கள் இரண்டரை லட்சம்பேரும் நெட்டால், டிரான்ஸ்வால் மாநிலங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

நெட்டால் மாநிலத்தின் தலைநகர் பீட்டர் மாரிட்ஸ்பர்க் என்ருலும், டர்பன் மாநகரம்தான் எல்லா நகரங்களையும் விட மக்கள் தொகையிலும், செல்வத்திலும் சிறந்தது ஆகும். இங்கேதான் தமிழ் மக்களில் பெருவாரியான பேர் குடியிருந்து வருகின்றனர். இந்நகரிலேயே தமிழ் மக்களின் மிகப் பெரிய நிறுவனமாகிய நெட்டால் தமிழ் வைதீக சபை இருக்கிறது. இது முப்பது லட்சம் ரூபாய்ச் செலவில் கட்டப்பெற்ற மூன்று அடுக்கு மாளிகையில் தொண்டாற்றி வருகிறது. இந்தச் சபையின் பொன்விழா 1963இல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

# தென்மேற்கு ஆப்பிரிக்கா

இது அட்லாண்டிக் பெருங்கடல் அருகே உள்ளபகுதி. கேப் பகுதிக்கு வடக்கே அமைந் திருக்கிறது.

இப்பகுதி ஜெர்மன் ஆட்சியில் இருந்தது. முதலாவது உலகப் போருக்குப் பிறகு சர்வ தேசச் சங்கம், அச்சங்கத்தின் சார்பில் இப் பகுதியை ஆளும் உரிமையை, தென் ஆப் பிரிக்க அரசினருக்கு வழங்கிற்று.

1966 ஆம் ஆண்டு இறுதியில் ஐக்கிய நாடுகள் அவை, தென் மேற்கு ஆப்பிரிக்கா ஐக்கிய நாடுகள் அவையின் நேரடி ஆட்சியில் இருந்து வரவேண்டுமென்றும் தென் ஆப்பி ரிக்க அரசினருக்கு எவ்விதத் தொடர்பும் இருக்கக் கூடாதென்றும் முடிவு செய்திருக் கிறது.

தென் மேற்கு ஆப்பிரிக்கா, 1952-க்குப் பிறகு திடீ ரென்று முக்கியத்துவம் பெற்றுவிட்டது. மெரைன் டையமெண்ட் கார்பரேசன் என்ற வணிகக் குழு இங்கு வயிரத்தைத் தோண்டி எடுக்கும் உரிமை பெற்றிருக் கிறது. இக் குழுவின் முதலாளியான காலின்சு என்ப வரின் வரலாறு சுவையானது.

தென் மேற்கு ஆப்பிரிக்காவின் கடற்கரையிலும் ஆற்றங்கரையிலும் 1100 மைல் தொலைவுக்கு வயிரச் சுரங்கங்கள் இருக்கின்றன. கடலிலிருந்து எடுக்கப் பட்ட ஊதா நிறமான ஒற்றைக்கல் ஒன்று, இரண்டு

லட்சம் ரூபாய்க்கு விலை போயிருக்கிறது. ஆரஞ்சு ஆறு கடலுடன் கலக்குமிடத்தில் ஏராளமான வயிரம் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆற்றுவெள்ளத்தில் வண்டல் வருவதுபோல வயிரமும் வந்து கடற்கரையை அடைந்துள்ளது என்று சொல்லுகிறார்கள். ஆற்றின் அடிப் பகுதியில் நீரூற்றுத் தோண்டுவதுபோலத் தோண்டி வயிரக் கற்களை எடுக்கிறார்கள். காலின்சு பல இடங்களில் இரப்பர்க் குழாய்கள் வழியாகச் சோதனை செய்து பார்க்கின்றார். நீர் மட்டத்திற்குக் கீழே 100 மைல் தொலைவிற்குக் குழாய்கள் போடுவதற்கும் அந்த இடங்களிலே வயிரம் இருக்கிறதா என்பதை அறியவும் பெரும் பணம் செலவு செய்திருக்கின்றனர். இந்த வேலைக்கு ஏற்ற நிபுணர்கள் வேலை பார்க்கவும் வயிரங்களைச் சுத்தம் செய்யவும் தரம் பிரிக்கவும் வசதியுள்ள ஒரு சிறு கப்பலைச் செய்து ஆற்றில் அந்தக் கப்பலை மிதக்க விட்டிருக்கின்றனர்.

மாதந்தோறும் மூன்றி லட்சம் காரட் எடையுள்ள வயிரக் கற்களையும் நவரத்தினங்களையும் அவர்கள் எடுத்து வருகின்றனர்.

## லெசோத்தோ

லெசோத்தோ என்பது தென் ஆப்பிரிக்க நாட்டின் எல்லைக்குள் உள்ள ஒரு சிறு நாடு. இது 1966-ல் அரசியல் விடுதலை பெற்றது.

இங்கு ஆப்பிரிக்கர்க்கு மட்டுமே சொத்துக்கள் உள்ளன. மக்கள் தொகை : ஆப்பிரிக்கர் எட்டு லட்சம், வெள்ளையர் 2,000, இந்தியர் 260. பரப்பு — 11,500 சதுர மைல்.

பெரும்பாலும் 6,000 முதல் 11,000 அடி வரை யுள்ள மலைகள் நிறைந்தது இந்நாடு. கோதுமை, அவல் முதலியன பயிரிட்டும் ஆடுமாடு வளர்த்தும் மக்கள் வாழ்கின்றனர், பல்லாயிரம் பேர் தென் ஆப்பிரிக்கச் சுரங்கங்களில் கூலி வேலை பார்க்கிறார்கள்.

முக்கிய ஏற்றுமதி: கம்பளிப் பொருள்கள். தலை நகரம்—மசேரு. இரயில்பாதையின் நீளம்—16 மைல்

# பாட்ஸ்வானு

பாட்ஸ்வானு, தென் ஆப்பிரிக்க எல்லைக்குள் உள்ள பிறிதொரு நாடு. பரப்பு 27,5000 சதுர மைல். எனவே இது அளவில் பெரிது. மக்கள் தொகை மூன்று லட்சம். அனைவரும் ஆப்பிரிக்க இனத்தவரே என்று சொல்லி விடலாம்.

இந்த நாட்டில் நான்கில் ஒரு பகுதி பாலைவனம், எஞ்சிய பகுதியில், மக்கள் கால்நடைகளை வளர்த்து, வயிறு வளர்க்கிறார்கள். தங்கம், மங்கனீசு, அஸ்பெஸ்டாஸ் சுரங்கங்கள் சிறு அளவில் உள்ளன.

1965-இல் இந்த நாடு அரசியல் விடுதலை பெற்றது. அந்நிகழ்ச்சிக்காக கபரோன்ஸ் என்ற பெயருடைய தலைநகரம் புதிதாக உருவாக்கப்பெற்றது. கடல் மட்டத்திலிருந்து 3,329 அடி உயரத்தில் இந்நகர் உளது.

## தென் ஆப்பிரிக்கா

### சில விவரங்கள்

**எல்லைகள்**

கிழக்கிலும் தெற்கிலும் இந்தியப் பெருங்கடல். மேற்கில் அட்லாண்டிக் பெருங்கடல். வடக்கில் தென்

மேற்கு ஆப்பிரிக்காவும் பெச்சுவானாலந்தும் தென் ரொடீசியாவும்.

**தெ. ஆ. எல்லைக்குள் உள்ள அயல் நாடுகள்**

1. பசுட்டோலந்து, 2. சுவாசிலந்து. 3. லெசோத்தோ. 4. பாட்ஸ்வானா.

**நாணயம்**

ராண்டு. பொன் சுரங்கங்கள் உள்ள பகுதியின் பெயர், ராண்டு.

**ஆட்சிமொழிகள்**

ஆங்கிலமும் ஆப்ரிக்கன்ஸ் எனப்படும் டச்சு மொழியும்.

**பரப்பளவு :** 4,72,700 சதுர மைல்

**மக்கள் தொகை ;** ஒன்றே முக்கால் கோடி

## வரலாறு

1498 வாஸ்கோடகாமா நன்னம்பிக்கை முனைக்கு வந்து கிறிஸ்துமஸ் பெருநாளை இங்கே கொண்டாடினார்.

1600 கப்பலில் செல்பவர்களுக்குப் பழங்களும் காய்கறிகளும் கிடைக்கச் செய்வதற்காக, கேப் துறைமுகத்திற்கு அருகே பழத் தோட்டமும் காய்கறித் தோட்டமும் போட்டு ஒரு குடியிருப்பும் உண்டாக்கப்பட்டது.

1655 டச்சு நாட்டினர் குடியேற்றம்.

1775 வெள்ளையர் கூட்டத்தின் இரு பகுதியினரிடையே பெரும் பிளவு.

1814 தென் ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷார் உரிமை கொண்டாடியது, வியன்னா உடன்படிக்கையால்

உறுதி செய்யப் பெற்றது. இதன்படி பிரிட்டிஷார் குடியேற்றம் தொடங்கிற்று.

1824 டர்பனில் துறைமுகம் ஏற்பட்டது.

1830 போயர்கள் கேப் மாநிலத்திலிருந்து உள்நாட்டுப் பகுதிகளுக்கு விரட்டப்பட்டனர்.

1833 அடிமை வியாபாரம் செய்வது பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் சட்டப்படி தடுக்கப் பட்டது.

1851 நெட்டாலில் கரும்பு பயிரிடத் தொடங்கினர். இந்தியர் பெரிய அளவில் குடியேறினர்.

1854 ஆரஞ்சு பிரீ ஸ்டேட்டின் உரிமைகள் ஏற்கப் பெற்றன.

1884 டிரான்ஸ்வாலில் தங்கச் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

,, இந்தியர் குடியேற்றத்தைத் தடுக்க டிரான்வாலில் முயற்சி.

1893 காந்தியடிகள் தென் ஆப்பிரிக்கா வருகை.

1899—1902 போயர்ப் போர்.

1910 பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் தென் ஆப்பிரிக்கா ஓர் உறுப்பு நாடாக ஆயிற்று.

1912 கோகலே தென் ஆப்பிரிக்கா வருகை.

1915 காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்குப் புறப்பட்டார்.

1919 இரண்டாம் உலகப் போர் முடிந்தது. ஜெர்மனி தோல்வியடைந்ததால் தென் ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் செல்வாக்கு மேலும் வளர்ந்தது.

1929 தென் ஆப்பிரிக்காவில் முதல் இந்திய ஹைகமிசனர் நியமனம்.

1950 இந்திய—தென் ஆப்பிரிக்க அரசுகளுக்கிடையே உறவு முறிந்தது.

1952 யுரேனியம் தோண்டப்பட்டது.

1957 தென் மேற்கு ஆப்பிரிக்காவில் பத்து லட்சம் காரட் வயிரக் கற்கள் எடுக்கப்பட்டன.

1959 சர்க்கரை உற்பத்தியில், உலகில் எட்டாவது இடத்தைத் தென் ஆப்பிரிக்கா அடைந்தது.

1960 நிறவெறிக் கொள்கை விரைந்து பரப்பப் பட்டது,

1961 பத்து லட்சம் நார்த்தைப் பழச் செடிகள் நடப் பட்டன.

1961 மே 31-ல் தென் ஆப்பிரிக்கா, பிரிட்டிஷ் காமன் வெல்த்திலிருந்து விலகிக்கொண்டு, குடியரசு நாடாக ஆயிற்று.

1963 இங்கிலாந்திலிருந்து சில பஞ்சாலைகள் தென் ஆப்பிரிக்காவுக்கு மாற்றப்பட்டன.

1965 கிம்பர்லி வயிரச் சுரங்கங்களில் அளவு கடந்த உற்பத்திப் பெருக்கம்.

1966 தென் மேற்கு ஆப்பிரிக்காவில் தென் ஆப்பிரிக்க அரசின் உரிமையை ஐக்கிய நாடுகள் அவை பறிமுதல் செய்தது.

1968 தென் ஆப்பிரிக்கா ரொடீசியாவில் பல [illegible]ச்சி களைத் தூண்டிவிட்டது.